# Tnpsc Tamil Current Affairs 27th April 2017

**1. கீழ்கண்டவற்றுள் எது இந்தியாவின் மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) பாதுகாப்பு படையின் கீழ்வரும்?**

[A] Special Frontier Force (SFF)

[B] Assam Rifles

[C] Central Reserved Police Force (CRPF)

[D] All the Above.

**விடை: [C] Central Reserved Police Force (CRPF)**

**விளக்கம்**: மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) என்பது மத்திய உள்துறை அமைச்சகத்தின் (MHA) அதிகாரத்தின் கீழ் இந்தியாவில் உள்ள ஐந்து பாதுகாப்புப் படைகளின் சீருடைப் பணிகளைக் குறிக்கிறது. இவை மத்திய எல்லை பாதுகாப்பு படை (BSF), மத்திய ரிசர்வ் காவல் படை (CRPF), இந்திய - திபெத்திய எல்லை காவல் (ITBP), சஷாஸ்த்ரா சீமா பால் (SSB) ஆகியனவாகும். சமீபத்தில், 1983 ஆம் ஆண்டு உத்தரபிரதேச கேடட் IPS அதிகாரியான ராஜிவ் ராய் பட்நாகர், CRPF இன் புதிய பொது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போதைய பொது இயக்குநரான, சுதிப் லக்டாகியாவின் பணியை தொடரவுள்ளார் அதுமுதல் இவரது பணிக்காலம் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் இப்பதவியில் நீடிப்பார். இவரின் நியமனமானது தற்போதைய பொது இயக்குநரான, சுதிப் லக்டாகியாவிற்கு பிறகு வருகிறது இவர் தலைமையிலான ஒரு நிகழ்வில் சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள சுக்மா மாவட்டத்தில் அல்ட்ரா - லெஃப்ட் எனப்படும் தீவிரவாதிகள் நடத்திய இரண்டு மிகப்பெரும் தாக்குதல்களில் 36 துணைப்படை வீரர்கள் காயமடைந்தது குறிப்பிடத்தக்கதாகும். இந்த பதவிக்கு பாட்நகர் நியமிக்கப் படுவதற்கு முன்னதாக, போதை தடுப்பு பிரிவின் (NCB) பொது இயக்குநராக பணியாற்றினார்.

**2. 2016-17 ஆண்டிற்கான டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர் சர்வதேச அறக்கட்டளையின் கேரளா மாநில விருதை வென்றவர் யார்?**

[A] பிரபாத் குமார்

[B] அஜய் பாண்டே

[C] நீலம் ஜுனேஜா

[D] திலீப் கே நாயர்

**விடை: [D] திலீப் கே நாயர்**

**விளக்கம்:** இந்தியாவைச் சேர்ந்த இளம் வயது கௌரவத் தலைவரான திலீப் கே. நாயர், அவர்களின் கல்வித் துறையில் சிறந்த செயல்பாடுகளுக்காக, 2016-17 ஆம் ஆண்டிற்கான டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர் சர்வதேச அறக்கட்டளையின் கேரளா மாநில விருது கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் வழங்கப்பட்டது. தற்போது அவர், அருணாச்சல பிரதேசத்தில் உள்ள வட கிழக்கு எல்லை தொழில்நுட்பக் கல்லூரியில் (NEFTU) தலைவராக உள்ளார். இவர் (நாயர்), நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் உள்ள பல்வேறு கல்வி திட்டங்களில் 12 ஆண்டு கால அனுபவம் பெற்றவர். மேலும் இவர் 'தி ஆட்டோமொபைல் சொசைட்டி (இந்தியா)' மற்றும் 'தி இன்ஜினியர்'ஸ் அவுட்லுக்' இதழின் நிறுவனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**3. சமீபத்தில் எந்த மாநில அரசு, 'பாரத இணையத் திட்டத்தை' அமல்படுத்த, பாரத பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் (BBNL) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

[A] தமிழ்நாடு

[B] உத்திர பிரதேசம்

[C] அஸ்சாம்

[D] மணிப்பூர்

**விடை: [A] தமிழ்நாடு**

**விளக்கம்**: பாரத நெட்வொர்க் இணையத் திட்டமான, 'பாரத்நெட் திட்டத்தை' தமிழகத்தில் அமுல்படுத்த பாரத பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் (BBNL) உடன் தமிழ்நாடு மாநில அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திற்காக, ரூ. 50 லட்சம் தொகையை மாநில அரசின் பங்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் இணைய இணைப்பு வழங்க உதவிகரமாக இருக்கும்.

**4. 'சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினம்' (ICDRD) எந்த நாளில் கடைப்பிடிக்கப்படுகிறது?**

[A] ஏப்ரல் 25

[B] ஏப்ரல் 26

[C] ஏப்ரல் 27

[D] ஏப்ரல் 28

**விடை: [B] ஏப்ரல் 26**

**விளக்கம்**: அணுசக்தி உலைகள் வெடிப்பின் விளைவுகளை உலகளாவிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 26 ஆம் தேதி அன்று, 'சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினம்' (ICDRD) கடைபிடிக்கப்படுகிறது. 1986 இல் செர்னோபில் அணுசக்தி ஆலை வெடித்து சிதறியதை நினைவுபடுத்துகிறது இந்த நிகழ்வு சோவியத் ஒன்றியத்தின் பெரும்பகுதிகளில் கதிரியக்க மேகமாக பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது, இப்பகுதி தற்போது பெலாரஸ், உக்ரைன் மற்றும் ரஷ்ய கூட்டமைப்பின் எல்லைகளாக உள்ளன. இந்த வெடிப்பு காரணமாக, மூன்று நாடுகளிலும் சுமார் 8.4 மில்லியன் மக்கள் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டனர்.

**5. ஆஸ்கார் விருது வென்ற திரைப்பட இயக்குனரான ஜொனாதன் டெம்மி, சமீபத்தில் காலமானார் அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

[A] அமேரிக்க ஐக்கிய நாடுகள்

[B] பிரான்ஸ்

[C] ஜெர்மனி

[D] ரஷ்யா

**விடை: [A] அமேரிக்க ஐக்கிய நாடுகள்**

**விளக்கம்**: பிரபல அமெரிக்கத் திரைப்பட தயாரிப்பாளரும், ஆஸ்கார் விருது பெற்றவருமான ராபர்ட் ஜோனதன் டெம்மி (73) என்பவர் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் காலமானார். இவர் தனது படைப்புகளான "Silence of the Lambs" மற்றும் "philadelphia" ஆகியவற்றிற்காக நன்கு அறியப்பட்டவர். மேலும் இவர் ஒரு சிறந்த ஆவணப் படங்களான 1984 "Talking Heads" மற்றும் இசைத் திரைப்படமான "Stop Making Sense", அதே போல் நீல் யங் மற்றும் ஜஸ்டின் டிம்பர்லேக் ஆகியவற்றையும் இயக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**6. உலகளாவிய சமூக வேலைத்திட்டத்திற்கான நட்பு நாடுகள் 'Football for Friendship' (F4F) FIFA கால்பந்தாட்டத்தில் இந்தியாவை பிரதிநிதித்துவம் படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளவர்?**

[A] ருத்ரா சென்

[B] சுஜல் காஹர்

[C] சகான் சௌகான்

[D] சந்தீப் குமார்

**விடை: [B] சுஜல் காஹர்**

**விளக்கம்**: மும்பையில் இருந்து கால்பந்தாட்ட வீரரும், கோல் கீப்பருமான சுஜல் கஹார் (12) என்பவர் FIFA கால்பந்தாட்ட நட்பு 'Football for Friendship' (F4F) உலக சமூக திட்டத்தின் 5 வது பதிப்பில் இந்தியாவை பிரதிநிதித்துவம் படுத்தியுள்ளார். இந்த திட்டத்தில் இந்தியா முதன் முறையாக சேர்ந்து 60 க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து செயல்படவுள்ளது. ஜூலை 2017

ஆம் ஆண்டு ஜூலை மாதம் ரஷ்யாவில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உலகெங்கிலும் உள்ள இளம் கால்பந்தாட்ட வீரர்களுடன் சுஜலும் இணையவுள்ளார். F4F திட்டம் என்பது FIFA மற்றும் Gazprom ஆல் அளிக்கப்படும் சர்வதேச குழந்தைகளின் சமூக திட்டமாகும். இந்த 'F4F' திட்டத்தின் முக்கிய நோக்கமானது, சிறுவர்களிடையே கால்பந்தாட்டத்தின் மீதுள்ள ஆர்வத்தை வளர்த்து, இளைஞர் விளையாட்டுக்களை மேம்படுத்தி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதும், பல்வேறு நாடுகளிலுள்ள குழந்தைகளிடையே காணப்படும் வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் தேசியங்களுக்கு மதிப்பளிப்பதும் ஆகும்.

**7. இந்திய - திபெத்திய எல்லை காவற்படையின் (ITBP) புதிய பொது இயக்குனராக நியமிக்கப்பட்டவர் யார்?**

[A] ராஜிவ் ராய் பாட்நாகர்

[B] சுதீப் லக்தாக்கியா

[C] RK பச்சானந்தா

[D] சுகன் சௌத்ரி

**விடை: [C] RK பச்சானந்தா**

**விளக்கம்:** 1983 ஆம் ஆண்டு மேற்கு வங்காள மாநில ஐ.பி.எஸ். அதிகாரியான, ஆர்.கே. பச்நந்தா இந்திய திபெத்திய எல்லை காவல் (ITBP) யின் பொது இயக்குநராக நியமிக்கப்பட்டார். தற்போது அவர், தேசிய அவசர நிலைகளை சமாளிப்பதற்காக இந்தியாவின் சிறப்பு அமைப்பாக விளங்கும் தேசிய இயற்கை பேரழிவுகள் மீட்புக்குழு (NDRF) மற்றும் CBRN இன் பொது இயக்குநராக பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் ஜூன் 30 ஆம் தேதி 2017 ஆம் ஆண்டு ITBP DG பொது இயக்குனர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் கிருஷ்ணா சவுத்ரியின் பணியை தொடர்கிறார். பச்நந்தா ITBP யின் பொது இயக்குனர் பதவியில் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வரை நீடிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

**8. உலக சாலை சந்திப்பு 'World Road Meeting' (WRM) இன் 18 வது பிரதியை நடத்தும் நாடு எது?**

[A] பிரேசில்

[B] இந்தியா

[C] சீனா

[D] தென் ஆப்ரிக்கா

**விடை: [B] இந்தியா**

**விளக்கம்**: 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 முதல் 17 வரை இந்தியாவில் IRF உலக சாலை சந்திப்பின் 'World Road Meeting' இன் 18 வது பிரதி தில்லியில் நடைபெற உள்ளது இந்தக் கூட்டத்தின் மையக் கரு 'பாதுகாப்பான சாலைகள் மற்றும் ஸ்மார்ட் போக்குவரத்தே: பொருளாதார வளர்ச்சியை உந்தமாகும்' "Safe Roads and Smart Mobility: The Engines of Economic Growth" என்பதாகும். WRM கூட்டத்தை கடந்த 60 ஆண்டுகளாக ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை சர்வதேச சாலை கூட்டமைப்பான (IRF) மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது. இது ஒரு மதிப்புமிக்க நிகழ்வாகும் மற்றும் 4,000 சர்வதேச மற்றும் தேசிய பங்கேற்பாளர்களை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநாட்டின் முக்கிய நோக்கம் பாதுகாப்பான, நிலையான மற்றும் ஸ்மார்ட் சாலை போக்குவரத்து மற்றும் இயக்கம் ஆகியவற்றை வழங்குவதில் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காண்பதும், விவாதிப்பதும் ஆகும். WRM ஒரு மாநாடு, ஒரு கண்காட்சி, ஒரு இளம் தொழில்முறை ஆய்வகம் மற்றும் ஒரு புதுமை கஃபே ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும் உலகெங்கிலும் இருந்து வெளியாகும் கடை நிலை ஆராய்ச்சி, சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு வெளியீட்டை வழங்குகிறது.

**9. 2017 ஆம் ஆண்டிற்கான மிஸ் டீன் யுனிவர்ஸ் பட்டத்தை முடிசூட்டியது யார்?**

[A] Xirelle Agustin

[B] Nicole Obanto

[C] Nieveless Gonazalez

[D] Srishti Kaur

**விடை: [D] Srishti Kaur (சிரிஷ்டி கவுர்)**

**விளக்கம்:** இந்தியாவைச் சேர்ந்த சிரிஷ்டி கவுர் என்பவர், 2017 ஆம் ஆண்டுக்கான மிஸ் டீன் யுனிவர்ஸ் பட்டத்தை மத்திய அமெரிக்க நாடான நிகரகுவாவின் தலைநகரான மானாகுவாவின் 'ரூபன் டேரியோ' தேசிய அரங்கத்தில் முடிசூட்டிக்கொண்டார். மேலும் இவர் இந்திய தேசிய பறவையான மயிலை சிறப்பிக்கும் வகையில் இடம்பெற்ற போட்டியில் சிறந்த ஆடைக்கான தேசிய விருதினைப் பெற்றார். இவர் நொய்டாவில் உள்ள 'லோட்டஸ் வேலி' சர்வதேச கல்வி நிலையத்திலிருந்து பயின்றார், தற்போது அவர் லண்டன் ஸ்கூல் ஆ்ஃப் ஃபேஷன்ஸில் தனது கல்வியை தொடர்கிறார். கவுர் புவேர்ட்டோ ரிக்கோவின், நெய்வேல்ஸ் கோன்சலசை வெற்றி பெற்று மிஸ் டீன் யூனிவர்ஸாக பட்டத்தை பெற்றார். தவிர, பிலிப்பைன்ஸில் இருந்து சைரெய்ல் அகஸ்டின் இளைஞர் பிரிவிலும் வெற்றி பெற்றார், அதே நேரத்தில் கோஸ்டா ரிகாவின் நிக்கோல் ஒபாண்டோ, 'டீன் சார்ம்' விருதினை பெற்றார். இந்தப் போட்டியை 15 முதல் 19 வயது வரையுள்ள இளைஞர்களுக்கு மிஸ் யுனிவர்ஸ் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**10. குஜராத் இன்டர்நேஷனல் பைனான்ஸ் டெக் சிட்டி (GIFT CITY) இன் கௌரவ துணைத் தூதரக அலுவலகத்தை திறக்க உள்ள முதல் நாடு என்ற பெருமையை பெற்றது?**

[A] ஜெர்மனி

[B] பெல்ஜியம்

[C] சிங்கப்பூர்

[D] தென் ஆப்ரிக்கா

**விடை: [B] பெல்ஜியம்**

**விளக்கம்**: குஜராத் இன்டர்நேஷனல் பைனான்ஸ் டெக்-சிட்டி (GIFT City) இல் கௌரவ துணை தூதரக அலுவலகம் திறக்க முதல் நாடு பெல்ஜியம். டெல்லியில் உள்ள பெல்ஜிய தூதரகத்திற்கு கூடுதலாகவும், மும்பை மற்றும் சென்னையில் இரு தூதரகங்கள் மற்றும் கொல்கத்தாவில் உள்ள கௌரவ துணைச் செயலகம் ஆகியவற்றிற்கு கூடுதலாகவும் உள்ளது. இது தவிர, ஹரி சங்கரன் குஜராத் மாநிலத்திற்கு பெல்ஜிய இராஜ்ஜியத்தின் கௌரவ துணைத் தூதராகவும் நியமிக்கப்பட்டார். சங்கரன் உள்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் (IL & FS) துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் செயல்படுவார். GIFT நகரம் சர்வதேச நிதி சேவைகள் மையம் (IFSC) உடன் இந்தியாவின் முதல் பல்-சேவை SEZ ஆகும், இது உலகின் மிகப்பெரிய நிதியியல் சேவைகள் சந்தைக்கு உலகளாவிய நிறுவனங்களின் உலகின் உள்கட்டமைப்பு வசதிகளையும் வழங்கும் வகையில் உள்ளது.